*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p603-611** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# நெடுநல்வாடையில் இயற்கைப் பதிவுகள்

*Natural Imagery in Nedunalvadai: A Study*

**முனைவர் கு. அன்னபூரணி,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சி - 620 002.

**Dr. K. Annapoorani*,**
*Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College,*
*(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
***Email**: annapoorani@sigc.edu, **ORCiD:** 0009-0005-6014-4123*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email:
*annapoorani@sigc.edu*

**Abstract:** Sangam literature serves as a literary repository highlighting the lifestyle, culture, and relationship with nature of ancient Tamils. Among these works, Nedunalvaadai, one of the Ten Idylls (Pattupattu), is a remarkable text that intricately records natural scenes. Authored by Nakkeerar against the backdrop of the severe cold and chilly north wind of the winter season (Koothir), this work portrays the heroine's sorrow of separation and the hero's duties in the military camp. Right at the beginning of Nedunalvaadai, various natural elements such as rain, dew/frost, wind, water, birds, and animals are featured. The text illustrates different states of nature, including fields flourishing due to rain, people shivering from the cold, and the normal behaviors of animals altering due to the chilling weather. This research paper examines Nedunalvaadai across various dimensions, including weather, rain, dew, wind, water resources, trees, plants, birds, animals, and the lifestyle of the people in harmony with nature. Furthermore, it explores how nature functions not merely as a background, but as a literary technique to express the heroine's inner grief and as a setting that emphasizes the hero's wartime duty. In this regard, Nedunalvaadai stands as a crucial literary proof to understand the nature-aligned lifestyle of the Tamils of the Sangam era.

**Keywords:** *Nedunalvaadai, Nakkeerar, Nature, Winter Season (Koothir), North Wind, Rain, Dew, Water Resources.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

***ஆய்வுச் சுருக்கம்***

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியலையும் பண்பாட்டையும் இயற்கையோடு அவர்கள் கொண்டிருந்த உறவையும் எடுத்துரைக்கும் இலக்கியக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. அவற்றுள் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாகிய நெடுநல்வாடை, இயற்கைக் காட்சிகளை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ள சிறப்பு மிக்க நூலாகும். நக்கீரரால் இயற்றப்பட்ட இந்நூலானது, கூதிர்ப் பருவத்தின் கடுங்குளிரையும் வாடைக்காற்றையும் பின்னணியாகக் கொண்டு, தலைவியின் பிரிவுத் துயரத்தையும் தலைவனின் போர்ப்பாசறை செயல்பாடுகளையும் எடுத்துரைக்கிறது.

நெடுநல்வாடையின் தொடக்கத்திலேயே மழை, பனி, காற்று, நீர், பறவைகள், விலங்குகள் போன்ற பல்வேறு இயற்கைக் கூறுகள் இடம்பெறுகின்றன. மழையால் வயல்கள் செழிப்பது, பனியால் மக்கள் நடுங்குவது, குளிரால் விலங்குகளின் இயல்பான செயல்பாடுகள் மாறுபடுவது போன்ற இயற்கையின் பல்வேறு நிலைகளை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்ஆய்வுக்கட்டுரையில் நெடுநல்வாடையில் இடம்பெறும் வானிலை, மழை, பனி, காற்று, நீர் வளம், மரங்கள், செடிகள், பறவைகள், விலங்குகள், இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்வியல் போன்ற பல்வேறு நிலைகளில் ஆராயப்படுகின்றன. மேலும் இயற்கை வெறும் பின்னணியாக இல்லாமல், தலைவியின் அகத்துயரத்தை வெளிப்படுத்தும் உத்தியாகவும் தலைவனின் போர்க்கடமையை வலியுறுத்தும் சூழலாகவும் செயல்படும் விதம் குறித்தும் ஆராயப்படுகிறது. இவ்வகையில் நெடுநல்வாடை சங்க காலத் தமிழரின் இயற்கையோடு இணைந்த வாழ்வியலை அறிந்து கொள்ள உதவும் முக்கிய இலக்கியச் சான்றாக விளங்குகிறது.

***திறவுச் சொற்கள்***

*நெடுநல்வாடை, நக்கீரர், இயற்கை, கூதிர்ப்பருவம், வாடைக்காற்று, மழை, பனி, நீர்வளம்.*

**1. முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில், சங்க இலக்கியங்கள் காலத்தால் அழியாத பெருமையைப் பெற்றுள்ளன. சங்கப் புலவர்கள் தாம் வாழ்ந்த சமூகத்தின் இயற்கைச் சூழலை வெறுமனே பார்த்துப் பதிவு செய்யவில்லை; இயற்கையையும் மனித வாழ்க்கையையும் ஒன்றிணைத்துப் பாடினர். மலை, காடு, வயல், கடல், பாலைவனம் ஆகிய நிலங்களும், அவற்றுடன் தொடர்புடைய மழை, காற்று, மரம், செடி, கொடி, மலர், பறவை, விலங்கு போன்றவையும் சங்கப் பாடல்களில் முக்கியத்துவம் பெறுகின்றன (சுப்பிரமணியன் 14).

அவ்வகையில் நெடுநல்வாடை இயற்கைச் சூழலுக்குச் சிறப்பிடம் அளிக்கும் நூலாக விளங்குகிறது. நூலின் நிகழ்வுகள் கூதிர்ப்பருவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. வடக்கிலிருந்து வீசும் குளிர்ந்த வாடைக்காற்று தலைவிக்கு நீண்ட பிரிவுத் துயரத்தை ஏற்படுத்துகிறது. அதே காலநிலை போர்ப்பாசறையில் இருக்கும் தலைவனின் கடமையுணர்வை வலியுறுத்தும் சூழலாகவும் அமைகிறது. இயற்கை நெடுநல்வாடையில் வெறும் பின்புலமாக இல்லாமல், அதன் கதையோட்டத்தையே இயக்கும் முக்கிய கூறாக இருப்பதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## 2. ஆய்வு நோக்கம்

நெடுநல்வாடையில் இடம்பெற்றுள்ள இயற்கைக் காட்சிகளை விளக்குதல், கூதிர்ப் பருவத்தின் இயற்கை நிலையை ஆராய்தல், மழை, பனி, காற்று, மேகம் போன்ற வானிலைக் கூறுகளை ஆய்வு செய்தல், நீர் மற்றும் நிலம், தாவரங்கள், மலர்கள் பற்றிய குறிப்புகளை எடுத்து இயம்புதல் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. மேலும் தலைவியின் பிரிவுத் துயரத்தில் இயற்கையின் பங்களிப்பு, இயற்கை மனித வாழ்க்கையோடு கொண்டிருந்த தொடர்பு, நக்கீரரின் இயற்கை வர்ணனைத் திறன் ஆகியவற்றை விளக்கி வெளிப்படுத்துவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

## 3. நெடுநல்வாடை — நூல் அறிமுகம்

சங்க இலக்கியப் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகிய நெடுநல்வாடை, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டு நக்கீரரால் பாடப்பட்டதாகும் (கதிர்முருகு 9). அகச்செய்திகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்நூல் புறம் சார்ந்த ஓரிரு குறிப்புகளைக் கொண்டுள்ளதால் அகப்புற நூலாக அறியப்படுகிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள பழங்கால மக்களின் வாழிடச் சூழல், உயிரினச் சூழல், பருவகாலச் சூழல் குறித்து ஆராய்கையில், சங்ககால மனிதன் இயற்கையைத் தமது வாழ்க்கையோடு தொடர்பு படுத்திக் கொண்ட விதத்தினைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

## 4. கூதிர்ப்பருவம்

நெடுநல்வாடை நூலானது கார்கால வருணனையில் தொடங்குகிறது. இந்நூலில் குறிப்பிடப்படும் நிகழ்வுகள் வாடைகாலத்தில் நிகழ்வதால், பருவக்காலத்தால் பெயர்கொண்ட ஒரே பத்துப்பாட்டு நூலாக இது விளங்குகிறது. உலக உயிர்கள் அனைத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன.

*"காரும் மாலையும் முல்லை"*

**(தொல்.அகத். நூ.6)**

தொல்காப்பியம் முல்லைக்குரிய பொழுதுகளாகக் கார்காலத்தையும் மாலைப்பொழுதினையும் குறிப்பிடுகின்றது. நூலின் தொடக்கத்திலேயே கார்காலத்தின் காட்சிகள் உயிரோட்டத்துடன் சித்திரிக்கப்படுகிறது.

*"வையகம் பனிப்ப வலன் ஏர்பு வளைஇப்*
*பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென"*

**(நெடு. அடி. 1–2)**

உலகம் பனியால் குளிர்ந்து காணப்படுவதையும் தவறாமல் மழை பெய்வதையும் நக்கீரர் குறிப்பிடுகிறார். மழை இயற்கையின் உயிர்நாடியாக விளங்குகிறது. மழை பெய்வதால் நீர்நிலைகள் பெருகுகின்றன, வயல்கள் செழிக்கின்றன, பறவைகள் நீர்நிலைகளை நாடுகின்றன. மழை தனித்த இயற்கைக் கூறாக இல்லாமல், சமூக செயல்பாடுகளுக்குக் காரணமாக விளங்குவதனை இதன் மூலம் அறிய முடிகின்றது.

*"வானின் றுலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று"*

**(குறள் 11)**

என்ற குறளில் வானம் மழையைக் கொடுப்பதால்தான் இவ்வுலகம் இயங்குகிறது என்றும், ஆகையால் மழை அமிழ்தம் போன்றது என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார் (பரிமேலழகர் 21).

தமிழர் ஆண்டுகளைப் பருவங்களாகப் பிரித்து இயற்கை மாற்றங்களைக் கவனித்து வாழ்ந்தனர். கூதிர்ப் பருவத்தின் கடுங்குளிரையும், அதனால் உயிரினங்களிடத்தும் மனிதர்களிடத்தும் ஏற்படும் மாற்றங்களையும் நெடுநல்வாடை நுட்பமாகப் பதிவு செய்துள்ளது.

*"குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பால் நாள்"*

**(நெடு. அடி. 12)**

குன்றுகளையே குளிரச் செய்யும் அளவுக்குக் கூதிர் காலம் கடுமையாக இருந்தது என்று புலவர் உணர்த்துகின்றார். இங்கு 'குளிர்' என்பது வெறும் உடல் உணர்வு அல்ல; அது முழு இயற்கையையும் ஆட்கொண்ட பருவநிலை மாற்றமாகக் காணப்படுகிறது.

*"பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப"*

**(நற். பா. 7)**

மழையால் உருவாகும் அருவி மற்றும் காட்டாற்றின் நீர்ப்பெருக்கத்தை நற்றிணைப் பாடல் இவ்வாறு விளக்குகின்றது. இதன் மூலம் சங்க காலத் தமிழரின் மழைச்சூழல் மற்றும் நீரியல் பற்றிய நுண்ணறிவு புலனாகின்றது.

*"மொய்க் கொள் பெரும் பனி நலியப் பலருடன்*
*கைக்கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க"*

**(நெடு. அடி. 7–8)**

பெரும்பனி மக்களை நடுங்கச் செய்கிறது. அவர்கள் கைகளில் நெருப்பை ஏந்தியோ அல்லது நெருப்பின் அருகில் அமர்ந்தோ குளிரைப் போக்கிக் கொள்கின்றனர். பழந்தமிழர்கள் காலநிலைக்கு ஏற்பத் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டதனை இதன் மூலம் அறிய முடிகின்றது.

**5. மரங்களும் செடிகளும்**

சங்க இலக்கியங்களில் மரங்களும் செடிகளும் அழகு மற்றும் பருவநிலைகளின் அடையாளங்களாக அமைகின்றன. புவியில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் பாதுகாக்கப்பட வேண்டியவைகளாகும். பழந்தமிழர் வாழ்வியலில் உலக உயிர்கள் காக்கப்பட்டன; வாழ்க்கைக்கு அவற்றைப் பயன்படுத்திய மனிதன் அவற்றைப் பாதுகாக்கவும் செய்தான்.

*"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப"*

**(தொல்.அகத். நூ.20)**

என்ற நூற்பாவின் கருத்திற்கு இணங்க, நெடுநல்வாடையில் கருப்பொருள்கள் பற்றிய பதிவுகள் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றிருப்பதனைக் காண முடிகின்றது.

*"புன்கொடி முசுண்டைப் பொறி புற வான்பூ*
*பொன் போல் பீரமொடு புதல் புதல் மலர"*

**(நெடு. அடி. 13–14)**

மழையும் ஈரப்பதமும் நிறைந்த கூதிர்ப்பருவத்தில் புதர்களில் முசுண்டை, பீரம் போன்ற மலர்கள் மலர்வதாகப் புலவர் வருணிக்கிறார். குவளை மலரின் அழகை அரண்மனையின் அமைப்போடு

இணைத்துக் காட்சிப்படுத்துகிறார் நக்கீரர். இயற்கையில் காணப்படும் மலர்கள், செடிகள் அழகுப் பொருளாக மட்டுமல்லாமல், கலைகள் மற்றும் அலங்காரத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. அகில் மரப்பொருள் நெருப்பில் இடப்பட்டுப் புகைக்கப்படுவதால் நறுமணம் பரவுவதனையும், கட்டிட அமைப்பில் மரங்கள் பயன்படுத்தப்படுவதனையும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

பெண்கள் பிச்சிப்பூ மலர்வதைக் கொண்டு மாலைப்பொழுதினை அறிந்து கொண்டனர். குளிர்காலம் ஆகையால் வடநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சந்தனக்கல், தென்னாட்டுச் சந்தனம் இரண்டும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. அக்காலம் முதல் இக்காலம் வரை சந்தனம் மக்களின் பயன்படு பொருளாக இருந்து வருவதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. திருமணம் போன்ற சடங்குகளில் மட்டும் அட்சதைப் பொருளாகப் பயன்படுத்தப்படும் நெல், நாள்தோறும் இறைவழிபாட்டில் மலர்களுடன் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டுள்ளதனை நெடுநல்வாடை சுட்டுகின்றது.

### 6. விலங்குகளும் பறவைகளும்

சூழற்பரப்பில் மனிதனோடு விலங்குகள், பறவைகள் ஆகியன இன்றியமையா இடம் பெறுகின்றன. மனித சமூகமானது தம்மைச் சூழ்ந்துள்ள உயிரினங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கள் வாழ்வோடு இணைத்துக் கொண்டுள்ளது. பழங்காலத்தில் மனிதன் விலங்குகள், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களை அணுகிய விதம் குறித்து நெடுநல்வாடை தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

*"மா மேயல் மறப்ப மந்தி கூரப்*
*பறவை படிவன வீழக் கறவை*
*கன்று கோள் ஒழியக் கடிய வீசி"*

**(நெடு. அடி. 9–11)**

கடுமையான குளிர் வீசுவதால் விலங்குகள் மேய்வதையே மறக்கின்றன. குரங்குகள் குளிரின் தாக்கத்தால் தங்களின் இடங்களிலிருந்து கீழே விழுகின்றன. கறவை மாடுகள் தமது கன்றுகளைக் கூடப் பாலூட்ட விடாது எட்டி உதைக்கின்றன. இவ்வாறு மலைகளையே குளிரச் செய்யும் அளவிற்குக் கூதிர்ப்பருவக் குளிர் கடுமையாக இருந்ததாக நக்கீரர் சுட்டுகிறார். குளிர் என்பது மனிதர்களை மட்டும் பாதிக்காமல், விலங்குகளின் உணவு, உடல் இயக்கம், இயல்பான பழக்கங்கள் ஆகியவற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் இயற்கைச் சக்தியாகக் காட்டப்பட்டுள்ளது.

நெடுநல்வாடையில் ஊர் செழிப்பைப் பற்றி விளக்கும் பகுதியில்,

*"பைங் கால் கொக்கின் மென் பறைத் தொழுதி*

*இருங் களி பரந்த ஈர வெண் மணல்*

*செவ்வரி நாரையொடு எவ்வாயும் கவர"*

**(நெடு. அடி. 15–17)**

என்ற அடிகளில், மழைக்குப் பின்னர் உருவாகும் ஈரமான வெண்மணற் பரப்பில் பசுமையான கால்களைக் கொண்ட கொக்குகளின் கூட்டம் காணப்படுகின்றது. நாரைகளும் கொக்குகளோடு இணைந்து நீர்நிலைகளைச் சார்ந்து இயங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கலி மயில் அகவும் ஒலியானது அரண்மனையின் அமைதியான சூழலுக்குள் கேட்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் நெடுநல்வாடையில் காட்சி சார்ந்த இயற்கையும் ஒலி சார்ந்த இயற்கையும் இணைந்து செயல்படுவதனை அறியலாம். போருக்குப் பயன்படுத்தப்படும் குதிரைகள் குளிரால் புல் உண்ணாமல் துன்பம் நிறைந்த குரலை எழுப்புகின்றன. நெடுநல்வாடையில் விலங்குகளும் பறவைகளும் இயற்கைச் சூழலின் உயிர்ப்பான கூறுகளாக இடம்பெறுகின்றன. மேலும், உயிரினங்கள் தனித்தனியாகப் பதிவு செய்யப்படாமல் இயற்கைச் சூழலோடு இணைத்துக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### 7. இயற்கையும் மனித வாழ்வியலும்

நெடுநல்வாடையில் மனிதன் இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்துபவனாக அல்லாமல், இயற்கையின் மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்பவனாகக் காட்டப்படுகின்றான். குளிரால் மக்கள் நெருப்பை நாடுகின்றனர்; விலங்குகள் தங்களின் இயல்பான செயல்பாடுகளை மாற்றிக் கொள்கின்றன; பறவைகள் தங்கும் இடங்களை நாடுகின்றன. இதன் மூலமாக இயற்கை—மனிதன்—உயிரினங்கள் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையன என்பது புலனாகின்றது.

இந்நூலில் அகப்பொருள் சார்ந்த முக்கியமான பகுதி தலைவியின் பிரிவுத் துயரமாகும். தலைவன் போருக்குச் சென்றுள்ளான்; தலைவி அவனைப் பிரிந்து தனிமையில் இருக்கிறாள். அவளைச் சூழ்ந்திருக்கும் குளிர், பனி, மழை, வாடைக்காற்று போன்றவை அவளுடைய துயரத்தை மேலும் அதிகரிக்கின்றன. குளிர் உடலை மட்டும் தாக்காமல் தலைவியின் உள்ளத்தையும் தாக்குகிறது. இங்கு இயற்கையின் புறச் சூழல் அகவுணர்வு மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

தலைவன் போர்ப்பாசறையில் தங்கியிருக்கிறான். குளிரான இரவிலும் அவன் தன் கடமையை நிறைவேற்றுகிறான்.

*"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்*

*சிலரொடு திரிதரும் வேந்தன்*

*பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"*

**(நெடு. அடி. 186–188)**

இரவு நேரத்திலும் தலைவன் உறங்காமல் வீரர்களைப் பார்வையிடுகிறான். இங்கு இயற்கையின் கடுமை தலைவனின் கடமையுணர்வை மேலும் உயர்த்துகின்றது. ஒரே இயற்கை நிகழ்வானது இருவேறுபட்ட உணர்வுகளை ஏற்படுத்துகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 8. விளக்கப்படம்

மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், நெடுநல்வாடையில் இடம்பெறும் இயற்கைக் கூறுகளைப் பின்வருமாறு ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

| நெடுநல்வாடையில் இயற்கைக் கூறுகள் — வகைப்பாடு | | | | |
|---|---|---|---|---|
| வானிலை (மழை, பனி, வாடைக்காற்று) | நீர் வளம் (அருவி, நீர்நிலைகள்) | தாவரங்கள் (முசுண்டை, பீரம், குவளை) | விலங்குகள் & பறவைகள் (மந்தி, கறவை, கொக்கு, நாரை) | மனித வாழ்வியல் (தலைவி பிரிவு / தலைவன் பாசறை) |

*படம் 1: நெடுநல்வாடையில் இடம்பெறும் இயற்கைக் கூறுகளின் தலைப்பு வாரியான வகைப்பாடு*

## 9. முடிவுரை

"நெடுநல்வாடையில் இயற்கைப் பதிவுகள்" என்ற தலைப்பில் அமைந்த இவ்ஆய்வுக்கட்டுரையானது, இயற்கைக் கூறுகளை மிக விரிவாகப் பதிவு செய்துள்ள சங்க இலக்கியப் படைப்பு நெடுநல்வாடை என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது. நக்கீரர் இயற்கையை வெளிப்புறக் காட்சியாக மட்டும் நோக்காமல், அதன் ஒவ்வொரு மாற்றத்தையும் மனித வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கிறார். மழை, பனி, காற்று, மேகம், நீர், மணல், வயல், மரம், செடி, விலங்கு, பறவை என பல்வேறு இயற்கைக் கூறுகளும் ஒன்றோடொன்று தொடர்புபட்டு ஒரு முழுமையான இயற்கை உலகத்தை உருவாக்குகின்றன.

இன்றைய சுற்றுச்சூழல் நெருக்கடியில் நெடுநல்வாடையை மீண்டும் வாசிப்பது, இயற்கையை வெறும் பயன்பாட்டுப் பொருளாகப் பார்க்காமல், மனிதனும் இயற்கையும் ஒன்றையொன்று சார்ந்த வாழ்வியல் அமைப்புகள் என்பதை உணர்த்தும் முக்கியப் பயனை அளிக்கும். ஆகவே நெடுநல்வாடையின் இயற்கைப் பதிவுகள், தமிழரின் தொன்மையான சூழலியல் சிந்தனைகளின் முக்கிய இலக்கியச் சான்றுகளுள் ஒன்றாகக் கருதத் தக்கதாகும்.

## துணைநூற் பட்டியல் (Works Cited — MLA Style)

[1.] கதிர்முருகு, ஆசிரியர். நெடுநல்வாடை. முல்லை நிலைய வெளியீடு, 2008.

[2.] இளம்பூரணர், உரையாசிரியர். தொல்காப்பியம் — பொருளதிகாரம். பூம்புகார் பதிப்பகம், 2008.

[3.] பரிமேலழகர், உரையாசிரியர். திருக்குறள். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1970.

[4.] ஆனந்தன், சு. தமிழ் இலக்கிய வரலாறு. கண்மணி பதிப்பகம், 2006.

[5.] சுப்பிரமணியன், ச. வே., ஆசிரியர். சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும். மெய்யப்பன் பதிப்பகம், 2003.

[6.] மாதையன், பெ. சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

KALANJIYAM